பக்கங்கள் 19+6

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 01 புதன்கிழமை 17.07.2024 அதிர்வு 352

## மின்சாரம் தாக்கி வயோதிபர் பலி!

(ராமு தனராஜா)

பதுளை, வினீதகம பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

02




# சாவகச்சேரி வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் ரஜீவ்

### யாழ். வந்து சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் சுகாதார அமைச்சர்



(எஸ்.நிதர்ஷன்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் தற்போது கடமையில் உள்ளவரே (வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ்) என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் இன்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களின் கேள்விக்குப் பதிலளித்தபோதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

02

# ரணிலின் வெற்றியை தடுக்கவே முடியாது!

### ஐக்கிய தேசியக் கட்சி திட்டவட்டம்



“ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவோ, அரசோ எந்தவித மறைமுக நடவடிக்கையையும் மேற்கொண்டதில்லை. ஆனால், எதிர்க்கட்சியே தேர்தலைப் பிற்போடுவதற்கான சதித் திட்டங்களை மேற்கொண்டு ரணில் விக்ரமசிங்கவின் மீது குற்றஞ்சாட்டி வருகின்றது. ஆனால், உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார். பெரும்பான்மை வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதை சஜித், அநுர யாராலும் தடுக்கவே முடியாது.”

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தொழில் உறவுகள் ஆணையாளர் நாயகமுமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

02

# யாழில் சுகாதார அமைச்சரின் கூட்டத்தை முகநூலில் நேரலை செய்து குழப்பத்தில் ஈடுபட்ட ஒருவர் கைது!




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சுகாதார அமைச்சர் பங்கேற்ற கலந்துரையாடலில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வடக்கு மாகாணத்தின் சுகாதார மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர், சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள், வைத்தியர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் இன்று நடைபெற்றது.

இதன்போது கூட்டத்தில் அழையா விருந்தாளியாகப் பங்கேற்ற ஒருவர் கலந்துரையாடலை முகநூல் வழியாக நேரலையில் ஒளிபரப்பியிருந்தார்.

இதனையடுத்து முகநூல் நேரலை செய்ய வேண்டாம் எனவும், அவரை அங்கிருந்து வெளியேறுமாறும் அதிகாரிகள் தெரிவிக்கவே அதனை மறுத்து அவர் தொடர்ந்து அமர்ந்திருந்தார்.

பின்னர் கூட்டம் நிறைவு பெற்றதை அடுத்து, சுகாதார அமைச்சருடன் பேச முற்பட்ட நிலையில் அமைச்சர் அங்கிருந்து செல்லவே, கூட்டத்தில் நின்ற அதிகாரிகளுடன் அவர் குழப்பத்தில் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து சத்தமிட்டவாறே ஆளுநர் மற்றும் அதிகாரிகள் கலந்துரையாடிய பிரதம செயலக அலுவலகத்துக்கு அவர் சென்று முரண்பாட்டில் ஈடுபட்டார். அதிகாரிகள் வெளியேறச் சொல்லியும் தொடர்ந்து முரண்பாட்டை ஏற்படுத்தவே பொலிஸாருக்குத் தகவலளிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சாவகச்சேரி பொலிஸார் குழப்பத்தில் ஈடுபட்ட நபரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் சாவகச்சேரி வைத்தியசாலை முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவும் அழையா விருந்தாளியாகப் பங்கேற்று முகநூல் நேரலை செய்தமையும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மின்சாரம் தாக்கி...

78 வயதுடைய வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் தனது தோட்டத்தில் விளையும் பயிர்களை விலங்குகளிடம் இருந்து காப்பாற்ற சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கியே உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் குறித்து மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ரணிலின் வெற்றியை...

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு ஒரு சிலர் மறைமுகமாகச் செயற்பட்டு வருகின்றனர். கடந்த வாரம் வியாபாரி ஒருவரால் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை கேள்விக்குட்படுத்தி, உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாகச் செயற்பட்டு, ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதை அமைச்சரவையில் உறுதிப்படுத்தியதுடன், உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை செல்லுபடியற்றதாக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் தேவையான ஆலோசனைகளை வழங்கி இருந்தார். அதன் பிரகாரம் குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

ஆனால், குறித்த வழக்கைத் தாக்கல் செய்த நபர், தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவரின் நெருங்கிய நண்பர். இதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்குச் சதித்திட்டங்களை மேற்கொள்பவர்கள் யார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். அதேபோன்று தற்போது மீண்டும் தேர்தலைப் பிற்போடும் நோக்கில் சட்டத்தரணி ஒருவரால் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கும் உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு நாட்டுக்குள் குழப்பகரமான நிலைமை ஒன்றை ஏற்படுத்தி, அதனை ரணில் விக்கிரமசிங்கவின் மேல் சுமத்துவதற்கான நடவடிக்கையே இடம்பெற்று வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதைத் தடுப்பதற்கும் அவர் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதற்குமே இவ்வாறான நடவடிக்கைகளைச் சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

அதனால் ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார். அவர் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவார். அதேபோன்று பெரும்பான்மை வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதை சஜித், அநுர யாராலும் தடுக்கவே முடியாது."
– என்றார்.

### சாவகச்சேரி...

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தற்போது நியமனம் பெற்று கடமையில் இருக்கும் அதிகாரியே வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்து சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் அத்தியட்சகராக வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் கடமைகளைப் பொறுப்பேற்ற நிலையில், விடுமுறையில் இருந்து வந்த வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் தானே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவா? கோபாலமூர்த்தி ரஜீவ்வா? என்ற சர்ச்சை எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதிசொகுசு பஸ்கள் விபத்து! சாரதி ஒருவர் பரிதாபச் சாவு!!

## பலர் காயங்களுடன் வைத்தியசாலையில்





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு அதிசொகுசு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த அதி சொகுசுபஸ்ஸும்,மட்டக்களப்பில்இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அதி சொகுசு பஸ்ஸும் குருநாகல் மெல்சிறிபுர பகுதியில் இன்று அதிகாலை நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது சம்பவ இடத்திலேயே அதிசொகுசு பஸ் ஒன்றின் சாரதி உயிரிழந்த நிலையில், இரு பஸ்களிலும் பயணித்த பலர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துதொடர்பில்மெல்சிறிபுரபொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## லயன் காம்பறாக்களை கிராமம் என்று சொல்லி

# காணி உரிமை கோரிக்கையை குழி தோண்டிப் புதைக்காதீர்கள்

### ஜனாதிபதியிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணி நேரடியாகத் தெரிவிப்பு

லயன் காம்பறாக்களைக் கிராமம் என்று சொல்லி, காணி உரிமை கோரிக்கையை குழி தோண்டிப் புதைக்காதீர்கள் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்துள்ளது.

பெரும் தோட்டங்களில் வாழும் சுமார் 2 இலட்சம் குடும்பங்களை, தோட்ட நிர்வாகங்களின் நவீன அடிமைத்துவ பிடிகளில் இருந்து அகற்ற வேண்டும் என்பது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ள முன்னணி கோரிக்கையாகும். அதைச் செய்யுங்கள். அதற்கு கொள்கை ரீதியாக ஆதரவு தருகின்றோம். ஆனால், லயன் காம்பராக்கள்தான் புதிய கிராமங்கள் என்று நீங்கள் இன்று கூற முயல்வதை நாம் ஏற்க முடியாது. இனியும் எமது மக்கள் மலை உச்சிகளில் மலைசாதி பழங்குடி மக்கள் போன்று வாழ்வதை நாம் ஏற்க முடியாது.

மலை நாட்டு புதிய கிராமங்கள் அமைச்சு என்ற பொருளில், பெரும் தோட்டங்களில், காணி உரிமையுடன் கூடிய தனி வீட்டு புதிய கிராமங்களை அமைத்து காணி உரிமை கோரிக்கையை, உங்கள் ஆட்சியில், 2015ம் ஆண்டு முதல் அரசியல் ரீதியாக ஆரம்பித்து வைத்த கட்சி தமிழ் முற்போக்கு கூட்டணியாகும். கடந்த வருடம், மலையக மக்கள் இந்நாட்டுக்கு வந்த 200 வருட பூர்த்தியை அரசியல் கட்சிகளும், தொழில் சங்கங்களும், சிவில் அமைப்புகளும் நினைவு கூர்ந்த நிகழ்வுகளில் மேல் எழுந்த பிரதான கோஷம், காணி உரிமை கோரிக்கை ஆகும்.

ஆகவே, லயன் காம்பராக்களை, "பெருந்தோட்ட புதிய குடியேற்ற கிராமங்கள்" என்று கூறி, இன்று மலையகம் முழுக்க எழுந்துள்ள காணி உரிமை கோரிக்கையை குழி தோண்டி புதைக்க வேண்டாம் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி., எம். வேலு குமார் எம்.பி., எம். உதயகுமார் எம்.பி ஆகியோர் அடங்கிய தூதுக்குழு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்து, இது தொடர்பான கட்சியின் நிலைபாட்டை தெரிவிக்கும் எழுத்து மூல ஆவணத்தையும் கையளித்துள்ளது.

லயன் குடியிருப்புகளை, "பெருந் தோட்ட புதிய குடியேற்ற கிராமங்களாக" அறிவிக்கும் உத்தேசம் கொண்ட தனது அமைச்சரவை பத்திரம் தொடர்பில் கலந்துரையாட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை ஏற்று, ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியை தமிழ் முற்போக்குக் கூட்டணி தூதுக்குழு சந்தித்து உரையாடியது. இந்தச் சந்தர்ப்பத்தில் த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி. உரையாற்றியதாவது:-

"2010ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக நீங்கள் இருந்த வேளையில், பெரும் தோட்டங்களில் வாழும் மலையக மக்களுக்கு, நெடுஞ்சாலை ஓரங்களில் வீடுகளை அமைக்க இடமளிப்பது மூலம்தான் அவர்களை தேசிய நீரோட்டத்துக்கு உள்ளே கொண்டு வர முடியும் என என்னிடம் நீங்கள் நேரடியாகக் கூறி இருந்தீர்கள். இது பற்றி 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி, உங்கள் அமைச்சராக இருந்த போது உரையாற்றி இருந்தேன். அன்று நாம் நாடாளுமன்றத்தில் உங்கள் 40 ஆண்டுகால பொது வாழ்வைச் சிலாகித்து ஒரு நிகழ்ச்சியை நடத்தினோம். எனது உரையின் ஹன்சாட் பிரதியை உங்களுக்கு இன்று இப்போது தருகின்றேன்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி பின்வரும் ஆறு கோரிக்கைகளை கடமை பூர்வமாக உங்களிடம் முன்வைக்கின்றது.

- நீங்கள், எமது மக்களுக்கு உறுதி அளித்த வீட்டு வதிவிட காணிகளை, புவியல் ரீதியாக தேசிய நெடுஞ்சாலைகளுக்கு அண்மித்ததாக, அதிக பட்சம் 3 கிலோ மீட்டருக்கு உட்பட்ட ஸ்தலங்களில் வழங்குங்கள்.
- காணியின் விஸ்தீரணம், அந்த பிரதேச செயலக பிரிவில், காணி வழங்களின் போது கடை பிடிக்கப்படும் நடைமுறைக்கு ஏற்ப இருக்க வேண்டும்.
- காணி உரிமைப் பத்திரத்தின் சட்ட அந்தஸ்து, நாட்டில் ஏனைய பிரதேசங்களில் வழங்கப்படும் காணி உரித்து பத்திரங்களை ஒத்ததாக இருக்க வேண்டும்.
- காணி உரிமைப் பத்திரங்கள், குடும்பப் பெண் தலைவிகளின் பெயர்களில் வழங்க பட வேண்டும் என நாம் விரும்புகின்றோம். இது பற்றி மேலும் நிபந்தனைகள் இருக்குமாயின், உங்களுடன் தொடர்ந்து உரையாட த.மு.கூ. தயாராக இருக்கின்றது.
- திருமணமான ஒவ்வொரு தம்பதிகளும், ஒரு குடும்பமாக கணிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் காணி வழங்கப்பட வேண்டும்.
- இயன்றோர், தமது காணிகளில் வீடுகளைக் கட்டிக் கொள்ளட்டும். இயலாதோர், அரச மற்றும் இந்திய, சர்வதேச வீடமைப்புத் திட்டங்களில் இடம்பெறட்டும்." - என்றார்.

# யாழ். போதனாவில் சுகாதார அமைச்சர் குழு



**(எஸ்.நிதர்ஷன்)**

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு இன்று விஜயம் செய்தனர்.

இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் என்புமச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் சுகாதார அமைச்சரால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலை விடுதிகள், சத்திர சிகிச்சைப் பிரிவுகளையும் யாழ். போதனா வைத்தியசாலையின் அரும்பொருட் காட்சியகத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்

அத்தோடு குருதி மாற்று சிகிச்சைக்கான உபகரணம் ஒன்றையும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு சுகாதார அமைச்சர் வழங்கி வைத்ததுடன் ஞாபகார்த்தமாக மரக்கன்றையும் நாட்டி வைத்தார்.

அமைச்சரின் இந்த விஜயத்தின் போது சுகாதார அமைச்சின் செயலாளர் மஹிபால மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கயன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வைத்திய சாலையின் அதிகாரிகள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.


















Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
தரளம் FM
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN
WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புதிய விவாதப் போக்கு

இலங்கையின் நீதித்துறையில் புதுமையான பழக்கம் ஒன்று வந்திருக்கிறது.

பழைய வழக்குகள், தீர்ப்புகளில் தவறு இருப்பதாகக் கூறி, அதன் பெயரில் புதிய வழக்குகளை போட்டு, வாதங்களை இழுத்தடிப்பதுதான் அது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் 2015 இல் கொண்டுவரப்பட்டது.

2015 ஏப்ரல் 28ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அது நிறைவேற்றப்பட்டது. 212 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஒருவர் எதிர்த்து வாக்களித்தார். ஒருவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. 10 பேர் வாக்களிப்பு சமயம் நாடாளுமன்றுக்கு சமுகம் தரவில்லை.

இத்துணை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து அந்த அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றியமை ஒரு முக்கியமான திருப்புமுனை.

அந்த அரசமைப்புச் சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வந்து 9 ஆண்டுகள் கடந்து விட்டன.

அது தொடர்பாக தனது தீர்ப்புகளில் உயர்நீதிமன்றம் அரசமைப்பு விளக்கங்களை - வியாக்கியானங்களை - பொருள்கோடல்களை - பல தடவைகள் தந்து விட்டது.

அல்லாமலும், அந்தத் திருத்தத்துக்கு அமைவாக இரண்டு ஜனாதிபதி தேர்தல்கள் நடந்தும் முடிந்து விட்டன.

அரசமைப்பு திருத்தம் அல்லது சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் சான்றுரைத்த பின்னர் அதன் சட்டச் செல்லுபடித் தன்மையை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது என்று அரசமைப்பே மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறுகிறது.

அப்படி இருக்க 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை தவறு என்று தெரிவித்து, அதனால் அந்தத் தவறு திருத்தப்படும் வரை ஜனாதிபதி தேர்தல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரும் அடிப்படை உரிமை மனுக்கள் இப்போது அடுத்தடுத்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

முதல் மனுவைப் பரிசீலித்த நீதிமன்றம் அது விசாரணைக்குத் தகுதி இல்லாத அற்பமான மனு என்ற விமர்சனத்துடன் முதல் நாளிலேயே அதனைத் தள்ளுபடி செய்தது. இந்த மனுவைத் தாக்கல் செய்தமைக்காக மனுதாரரை வழக்குச் செலவாக ஒரு லட்சம் ரூபாவை அரசுக்குச் செலுத்தும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இத்தகைய வழக்குகளைத் தாக்கல் செய்து உயர்நீதிமன்றத்தின் நேரத்தை விரயமாக்கி, நீதித்துறையைக் கேலிக்குள்ளாக்காதீர்கள் என்று நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ அறிவித்தும், அதேபோன்ற வழக்கு மீண்டும் தாக்கல் செய்யப்பட்டது. அதனையும் நிராகரித்த உயர்நீதிமன்றம், அந்த மனுதாரரை ஐந்து லட்சம் ரூபா வழக்கு செலவு தொகையை அரசுக்குச் செலுத்த உத்தரவிட்டது.

இப்போது பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னக்கோன் தெரிவு செய்யப்பட்டமை தவறானது என்பது தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக அரசமைப்புக் கவுன்ஸில் எடுத்த முடிவை - தீர்மானத்தை - சபாநாயகர் முற்றிலும் தவறாகவும், பிழையாகவும், வேண்டுமென்றும் திரித்து அர்த்தப்படுத்தி, ஜனாதிபதிக்குக் கடிதம் வழங்க, கவுன்ஸிலின் முடிவுக்கு மாறாக அந்த நியமனத்தை தேசபந்து தென்னக்கோனுக்கு ஜனாதிபதி வழங்கியமை தவறு என்பதே வழக்கின் அடிப்படை அம்சம்.

ஆனால் பிறிதொரு அடிப்படை உரிமை மீறல் வழக்கில் தேசபந்து தென்னைகோனுக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தவறானது என்று, இந்த வழக்கில் தேசபந்து தென்னக்கோனின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் வாதாடிக் கொண்டிருக்கிறார்.

நீதிமன்றங்கள் - குறிப்பாக உயர் நீதிமன்றம் - வழங்கிய தீர்ப்புகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்ய வழியில்லை. சில சமயங்களில் மட்டும் மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம். அப்படித் தீர்க்கமாகத் தீர்க்கப்பட்ட வழக்குகளின் தீர்ப்பை வைத்தே, நீதிமன்ற விடயங்களை - விவாதங்களை - இழுத்தடிக்கும் ஒரு போக்கு இப்போது தாராளமாகி வருகின்றது போலும்.



# பருத்தித்துறை கடற்கரை பிரதேசத்தில் யுத்திய நடவடிக்கையில் 17 பேர் கைது!



பருத்தித்துறை கடற்கரை பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட யுத்திய நடவடிக்கை மூலம் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை (16) காலை பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரையோரங்களில் பொலிஸார், விஷேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் இணைந்து மோப்ப நாய் சாகிதம் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் மற்றும் சந்தேகத்துக்கு இடமையான முறை நடந்து கொண்டவர்கள் என்று 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.






# ஆஸ்திரேலிய இராணுவத்தில் பணியாற்றிய ரஷ்ய உளவாளி!

## கைதின் பின்னணியில் அரசியல் காரணங்களா?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்யாவுக்காக உளவு பார்த்ததாக பிரிஸ்பேனில் வாழ்ந்த தம்பதியினர் குற்றம் சாட்டப்பட்டதுடன், பாதுகாப்பு இரகசியங்களை அணுக முயன்றனர் எனவும் ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படையில் இருந்து நீண்ட கால பணி விடுப்பில் உள்ள 40 வயது பெண் மற்றும் அவரது 62 வயது கணவர் உளவு குற்றம் சாட்டப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் உளவு மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டு விசாரணைக்குப் பிறகு, ரஷ்ய கடவுச்சீட்டைக் கொண்ட பிரிஸ்பேன் தம்பதியினர், புதிய உளவுச் சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட முதல் நபர்கள் ஆவர்.

ஆஸ்திரேலிய மத்திய பொலிஸ் ஆணையாளர் ரீஸ் கெர்ஷா கூறுகையில், பாதுகாப்புப் படையில் இருந்து நீண்ட கால விடுப்பில் உள்ள 40 வயதான கிரா கொரோலெவ் மற்றும் அவரது 62 வயதான கணவர் இகோர் கொரோலெவ் ஆகியோர் குற்றம் நிரூபிக்கப்பட்டால் 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் என தெரிவித்துள்ளார்.

### உளவு அமைப்பும் பாதுகாப்பும்

ஒரு நாட்டின் மீது நடத்தப்படும் மறைமுக தாக்குதல்களைத் தடுப்பது, நாட்டில் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் பாதுகாப்பது என உளவு அமைப்புகளின் வேலையும், அவசியமும் ஒவ்வொரு நாட்டுக்கும் இன்றியமையாததாகும்.

நாட்டின் பாதுகாப்பு என்பது பொலிஸ் மற்றும் இராணுவத்தை மட்டும் சார்ந்ததல்ல, அந்த நாட்டின் உளவு அமைப்புகளையும் பொறுத்தது. துரதிர்ஷ்டவசமாக இவர்களைப் பற்றி யாருக்கும் தெரிவதில்லை. ஒவ்வொரு நாடும் அவர்களுக்கென ஒரே உளவு அமைப்பை வைத்திருக்கும்.

அனைவருக்கும் புரிவது போல் சொல்ல வேண்டுமென்றால் இங்கு வேலை செய்பவர்கள்தான் உண்மையான கதாநாயகர்கள். அனைத்து நாடுகளும் உளவு அமைப்பை வைத்திருந்தாலும் சில நாடுகளின் உளவு அமைப்புகள் மட்டும் அவற்றில் சிறந்தவையாகவும், பலம் வாய்ந்தவையாகவும் இருக்கும்.

### ஆஸி இரகசியங்களைத் திருட முயற்சி

ஆஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வு அமைப்பின் இயக்குநர் ஜெனரல் மைக் பர்கெஸ் இந்த விசாரணையின் விவரங்கள் குறித்து உடனடியாக கருத்து தெரிவிக்கப் போவதில்லை என்று கூறினார்.

ஆஸ்திரேலியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் “உண்மையானது” என்றும், குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணை தீவிரமாக நடத்தப்படும் என்றும் பர்கெஸ் கூறினார்.

பல நாடுகள் ஆஸ்திரேலியாவின் ரகசியங்களைத் திருட முயல்கின்றன என்றும் அவர் கூறினார்.

நாங்கள் அப்பாவியாக இருக்க முடியாது, நாங்கள் மனநிறைவுடன் இருக்க முடியாது. உளவு பார்ப்பது என்பது வினோதமான கருத்து அல்ல. உளவு பார்ப்பது நமது பொருளாதாரத்தை சேதப்படுத்துகிறது. நமது மூலோபாய நன்மையை சீரழிக்கிறது. இது பேரழிவுகரமான விளைவுகளைக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு புலனாய்வு சேவைகள் திறமையானவை, உறுதியானவை மற்றும் பொறுமையானவை. அவர்கள் நீண்ட விளையாட்டை எங்களுடன் விளையாடுகிறார்கள்.

### ஆஸ்திரேலிய இராணுவத்தில் ரஷ்யர்

ஆஸ்திரேலிய இராணுவத்தில் ரஷ்யாவில் பிறந்தவரும் அவரது கணவரும் கிரெம்ளின் உளவுத்துறைக்கான முக்கியமான பாதுகாப்பு கோப்புகளை திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அவர்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்தனர். இருவருக்கும் ஆஸ்திரேலிய குடியுரிமை உள்ளது.

2018 ஆம் ஆண்டில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உளவு குற்றச்சாட்டுகளின் சட்டப்படி பிரிஸ்பேன் மாஜிஸ்திரேட்டால் இவர்கள் இருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

### பாதுகாப்பு கணினியில் சட்டவிரோத அணுகல்

குற்றஞ்சாட்டப்பட்ட கிரா கொரோலேவ் பல ஆண்டுகளாக ஆஸி ராணுவத்தில் தகவல் அமைப்பு தொழில்நுட்ப வல்லுநராக பணிபுரிந்ததாகவும், அரச பாதுகாப்புப் படையில் பாதுகாப்பு விவரங்களை பார்வையிட அனுமதி பெற்றதாகவும் கூறப்படுகிறது.

தொடர்ச்சி▼



# ஆஸ்திரேலிய இராணுவத்தில் பணியாற்றிய ரஷ்ய உளவாளி!

**தொடர்ச்சி▲**

2023 இல் இராணுவத்தில் இருந்து நீண்ட கால விடுப்பில் இருந்தபோது அவர் ரஷ்யாவிற்குப் பயணம் செய்ததாகவும், அவர் வெளியில் இருந்த போது, பிரிஸ்பேன் வீட்டிலிருந்து தனது உத்தியோக பூர்வ பணிக் கணக்கில் பாதுகாப்பு அமைப்புகளில் உள்நுழைவது எப்படி என்று தனது கணவர் இகோருக்கு அறிவுறுத்தியதாகவும் ஏ.எவ்.பி. குற்றம் சாட்டியுள்ளது.

அவரது கணவர் கோரப்பட்ட விவரங்களை அணுகி எடுத்து, ரஷ்யாவில் உள்ள அவரது மனைவிக்கு அனுப்புவார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். உளவுத் தரவுகள் ரஷ்ய அதிகாரிகளுக்கு வழங்கும் நோக்கத்துடன் அவர்கள் அந்தத் தகவலைத் தேடினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

கிரா கொரோலேவின் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆவணங்களில் , பாதுகாப்பு கணினி அமைப்புகளுக்கு சட்டவிரோத அணுகலை வழங்குதல், தகவல்களை நகலெடுத்தல் மற்றும் பரப்புதல் மற்றும் ரஷ்ய கூட்டமைப்பின் உளவுத்துறை சேவைகளுடன் டிசெம்பர் 6, 2022 வரை மற்றும் சமீபத்தில் ஜூலை 11 வரையிலான உறவைப் பேணுதல் போன்ற விவரங்கள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

**ரஷ்ய உளவுத்துறை வலையமைப்பு**

ஆஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வு அமைப்பின் இயக்குநர் ஜெனரல் மைக் பர்கெஸ் தெரிவிக்கையில், கிரா கொரோலெவ் ஆஸி பாதுகாப்புப் படையில் உளவு வேலை செய்யும் குறிப்பிட்ட நோக்கத்துடன் சேர்ந்தாரா, இந்த தம்பதியினர் ஒரு குறிப்பிட்ட பணிக்காக ஆஸ்திரேலியாவுக்கு வந்திருந்தால், அல்லது அவர்கள் சமீபத்தில் ஆட்சேர்ப்பு செய்யப் பட்டார்களா என்று தங்கள் உளவு நிறுவனங்கள்



தற்போது விசாரித்து வருவதாகக் கூறினார்.

இவர்கள் ஆஸ்திரேலியாவில் உள்ள ரஷ்ய தூதர்களுடன் தொடர்பு கொண்டார்களா அல்லது தொடர்பில் இருந்தார்களா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு எவரும் பதில் தரவில்லை. 2016 இல் குடியுரிமை பெற்ற ஒரு ரஷ்ய பெண்ணின் பாதுகாப்பு அனுமதியை சரிபார்க்கும் போது எவ்வாறு இத்தகைய ஆபத்தை தவறவிட்டது என்று கேட்டதற்கு, விசாரிக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

**தேசிய பாதுகாப்பு நலன்கள்**

பிரதம மந்திரி அந்தோனி அல்பானீஸ், இந்த நடவடிக்கை குறித்து தனக்கு விரிவாக விளக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படை ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதாவது ஏ.டி.எவ். உறுப்பினர் பற்றிய ஏதேனும் கடுமையான குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில், அவர்களின் பாதுகாப்புத் தளங்கள் மற்றும் அமைப்புகளுக்கான அணுகல் உடனடியாக ரத்து செய்யப்பட்டு உள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு தேர்வு வழிகாட்டி நூல்கள் வழங்கல்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

குச்சவெளி கோட்டத்தில் உள்ள திரியாய், குச்சவெளி, இரணைக்கேணி ஆகிய ஊர்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் தரம் 5 இல் கற்கும் மாணவருக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

இந்த நூல்கள் திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கதிரவேலு சண்முகம் குகதாசனால் வழங்கப்பட்டன.

# மருதமுனை விக்டோரியஸ் மேலங்கி அறிமுக நிகழ்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை விக்டோரியஸ் விளையாட்டு கழகத்தின் புதிய மேலங்கி அறிமுக நிகழ்வும் விக்டோரியஸ் கலர்ஸ் நைட் விழாவும் கழகத்தின் ஏற்பாட்டில் மருதமுனை ஓசாக்கா ரேஸ்ட் இன் வரவேற்பு மண்டபத்தில் நேற்று (16) இரவு நடைபெற்றன.


விக்டோரியஸ் விளையாட்டு கழகத்தின் தலைவர் ஏ.எம்.முபீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு ஐ.எல்.முஹம்மது தாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

விசேட அதிதியாக கிழக்கின் கேடயம் அமைப்பின் பணிப்பாளரும் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் முன்னாள் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் கலந்து கொணடார்.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸின் பிரத்தியோக மக்கள் தொடர்பாடல் இணைப்பாளருமான ஏ.ஆர்.அமீர், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.எம். நவாஸ், மருதமுனை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் யூ.எஸ்.சமீம், கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செயலாளர் எம்.ஐ. நஜ்முல் றியாஸ், அதன் பொருளாளர் எம்.எம்.சறூக், மஸ்ஜிதுல் கவுஸர் பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் எம்.எம். நிசார், தொழிலதிபர் எம்.என் சுஹைப் ரூமி உட்பட விக்டோரியா விளையாட்டுக் கழகத்தின் முகாமையாளர் எம்.என்.எம். ஹிஸாம், செயலாளர் எம்.ஏ.எம்.றஜாத், பொருளாளர் ஏ.பி ஆசீர், உப தலைவர் எம்.எம்.தாஹிர், ஆலோசகர் எம்.ரி.வாக்கிர் அஜ்மல், உப செயலாளர் எம்.சி.அகீரஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 830 மாணவருக்கு ஜனாதிபதி புலமைப் பரிசில்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் 'ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம்' மன்னார் மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு இன்று புதன்கிழமை (17) காலை இரு பிரிவுகளாக மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

நாடு முழுவதும் உள்ள வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் மன்னார் மற்றும் மடு ஆகிய இரு கல்வி வலயங்களையும் உள்ளடக்கி 830 மாணவர்கள் இந்தத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.



மன்னார் கல்வி வலயத்தில் 428 மாணவர்களும் மடு கல்வி வலயத்தில் 402 மாணவர்களும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதி புலமைப்பரிசில் இதன் போது வழங்கி வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், மன்னார், மடு வலய கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.









# சாமிமலை பகுதியில் இருவர் குளவி கொட்டுக்கு இலக்காகினர்

**(மஸ்கெலியா)**

சாமிமலை பகுதியில் மேலும் இருவர் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்கிய இரண்டு பேரும் நேற்று மாலை தோட்ட அம்புலன்ஸ் ஊடாக மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குளவி கொட்டுக்கு இலக்கிய ஒருவருக்கு இரத்த அழுத்தம் காரணமாக அதி தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது என்று மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். தோட்டத் தொழில் செய்து கொண்டு இருந்த வேளையில் கடும் காற்று வீசியதால் குளவி கூடு கலைந்து இரண்டு பேரையும் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.








# அம்பாறையில் சிறுவர் இல்லங்களுக்கு உணவு, சுகாதாரப் பொருள்கள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிறிசாலிஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 07 சிறுவர் இல்லங்களுக்கு உலர் உணவு பொருள்கள் மற்றும் காகிதாதிகள், சுகாதார பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

காரைதீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக உதவி பிரதேச செயலாளர் தலைமையில் உலர் உணவு பொருள்கள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவஞானம் ஜெகராஜன் கலந்து கொண்டு பொருள்களை வழங்கினார்.

இதன் போது அம்பாறை மாவட்ட உள, சமூக உத்தியோகத்தர் யூ.எல். அசார்டீன், அரச சார்பற்ற நிறுவன உத்தியோஸ்தர் ஐ.எல்.எம்.இர்பான் மற்றும்சிறுவர் இல்லமுகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.



# வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைக்காக பயிர் விதைகள் வழங்குவதற்கு ஏற்பாடு

(எம்.எப்.றிபாஸ்)

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தட்டுமுனை கிராமத்தில் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைக்காக பயிர் விதைகள் வழங்கப்படவுள்ளன.

பிதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் கிராம மட்டத்திலான குழுக்களால் அடையாளம் கண்ட பயனாளிகளுக்கு விழுது தன்னார்வ தொண்டர்களால் மட்டக்களப்பு பிரதி விவசாயப் பணிப்பாளர் மற்றும் விவசாய போதனாசிரியர் பிரபா ஆகியோரின் ஏற்பாட்டில் இரண்டு கட்டங்களாக வழங்கப்படவுள்ளது.

சுமார் 25 பயனாளிகளுக்கு பயிர்ச் செய்கை சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டு இறுதியாக பயிர் விதைகளும் அதற்கான ஏனைய பொருள்களும் வழங்கப்படவுள்ளன.



இந்தச் செயற்றிட்டம் சம்பந்தமாக வாகரை விவசாய கேந்திர நிலையத்துடன் இணைந்து கண்காணிக்கப் படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பாராட்டிக் கௌரவிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தி யோகத்தராக மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தி யோகத்தராக கடமையாற்றி தனது 32 வருட சேவையை வழங்கி ஓய்வுபெறும் தெய்வநாயகம் மோகனராஜாவைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவரது சேவை பற்றி பலரும் உரையாற்றினர்.

இறுதியாக பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌர வித்தனர்.



# பரீட்சை திணைக்கள உயர் பதவிகளில் இன சமத்துவம் பேணப்பட வேண்டும்

## கிழக்கு கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இலங்கை பரீட்சை திணைக்களத்தில் கடமையாற்ற வேண்டிய இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் பதவி நியமனங்களில் இன சமத்துவம் பேணப்பட வேண்டும் என்று இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம். முக்தார் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்திடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை பரீட்சைத் திணைக்களத் தில் உள்ள நிறைவேற்றுத்தர பதவிக ளான பரீட்சை ஆணையாளர் நாயகம், மேலதிக பரீட்சை ஆணையாளர் நாயகம், பிரதிப் பரீட்சை ஆணையாளர், உதவி ஆணையாளர் ஆகிய பதவிக ளில் இலங்கை கல்வி நிர்வாக சேவை யில் உள்ள முஸ்லிம் அதிகாரிகள் எவரும் நியமிக்கப்படாத குறை நீண்ட காலமாக நிலவி வருகிறது.

பரீட்சைத் திணைக்களத்தின் தற் போதைய கட்டமைப்பில் தமிழ் மற்றும் சிங்கள அதிகாரிகள் மாத்திரமே மேற்படி பதவிகளில் கடமையாற்றி வருகின்றனர்.

கடந்த காலங்களில் மேலதிக பரீட்சை ஆணையாளர் நாயகம், பிரதிப் பரீட்சை ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகிய பதவிகளில்



முஸ்லிம் அதிகாரிகள் கடமையாற்றி வந்துள்ளனர்.

இறுதியாக ஏ.எஸ்.முகமட் என்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி, பிரதிப் பரீட்சை ஆணை யாளராக கடமையாற்றி 2018 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பின்னர் எந்த ஒரு முஸ்லிம் அதிகாரியும் நியமனம் செய்யப்படவில்லை.

2007 மற்றும் 2017 ஆம் ஆண்டுக ளில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட முஸ்லிம் அதிகாரிகள் ஒருவராவது பரீட்சை திணைக்களத்துக்கு நியமனம் செய்யப்படவில்லை.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் அதிகாரிகள் நியம னம் செய்யத் தடை செய்யப்பட்டதொரு அரச நிறுவனமாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் மாறி உள்ளதா எனும் சந்தேகம் முஸ்லிம் கல்வியாளர்களால் நோக்கப்படுகிறது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தில் நிறைவேற்றுத் தரத்தில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் இல்லாமை கார ணமாகவே முஸ்லிம் பெண் பரீட்சார்த் திகளால் தமது தலையை மறைத்து அணியப்பட்டுள்ள பர்தாவின் காதுப் பக்கத்தை நீக்கிய பின்னர் பரீட்சைக்கு தோற்ற வேண்டுமென்ற ஒரு முஸ்லிம் கலாசாரத்துக்கு முரணானதொரு தீர்மானத்தை எடுப்பதற்கு காரணமாக அமைந்தது.

பரீட்சைத் திணைக்களத்தில் முஸ் லிம் அதிகாரிகள் இல்லாதிருப்பது குறித்து முஸ்லிம் அரசியல்வாதிகள் கவனம் செலுத்துவதாகவோ நாடாளு மன்றத்தில் கல்வியமைச்சரின் கவனத் துக்குக் கொண்டு வருவதாகவோ இல்லை.

இந்த நிலையில், பரீட்சை திணைக் களத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த முஸ்லிம் அதிகா ரிகள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று தமது சங்கம் பரீட்சைகள் ஆணை யாளர்நாயகத்தைவலியுறுத்தியுள்ளது.- என்றார்.



# ஆரம்ப பாடசாலைகளில் ஆங்கிலத்தை மேம்படுத்துவது தொடர்பில் ஆராய்வு!

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஆஸ்திரேலியாவின் மைக்ரோ–டெவலப்மெண்ட் இன்க்கின் பங்காளர்களுள் ஒருவரான டாக்டர் டோனா வாகன், தென் கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் கலை மற்றும் கலாச்சார பீடத்தின் கல்வியாளர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஆங்கில எழுத்தறிவு திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் கலை கலாச்சார பிரிவின் பீடாதிபதி, ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் தலைவர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அம்பாறை பிரதேசம் முழுவதிலும் உள்ள ஆரம்ப பாடசாலைகளில் ஆங்கில மொழி கற்றல் மற்றும் கற்பித்தலை மேம்படுத்துவது தொடர்பில் கூடுதலாகக் கவனம் செலுத்தப்பட்டது.





# மில்கோ பால் சேகரிப்பு நிறுவனத்தை தனியாருக்கு வழங்க வேண்டாம்!

## பால் கொள்கலன்களுடன் பண்ணையார்கள் ஆர்ப்பாட்டம்

(பழுவூரான்)

மில்கோ பால் சேகரிப்பு நிறுவனத்தைத்தனியாருக்குவழங்கவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பால் பண்ணையாளர்கள் இன்று புதன்கிழமை (17) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலில் மட்டக்களப்பு எருவில் பால் சேகரிப்பு நிலையத்தைச் சேர்ந்த பாற் பண்ணையாளர்கள் பால் சேகரிப்பு நிலையத்திலிருந்து, பால் கொள்கலன்களுடன், அருகிலிருந்த கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு முன்னால் ஒன்று கூடி தேங்காய் உடைத்து, கோசங்களை எழுப்பியவாறு எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதுவரை காலமும் எதுவித தடைகளும் இன்றி மில்கோ பால் சேகரிப்பு நிலையத்துக்கு நாம் பாலை வழங்கி கொண்டு வருகிறோம்.

அதனால் எமக்கு இதுவரையில் எதுவித இடர்பாடுகளும் இல்லை . எமக்கு மில்கோ நிறுவனம் வாராந்தம் முறையாகக் கொடுப்பனவை வழங்குகிறது. மேலும் எமக்கு பிள்ளைகளின் கற்றல், மரணச் செலவு, திருமணச் செலவு, உள்ளிட்ட பல செலவுகளுக்கும் மில்கோ நிறுவனம் மேலதிக உதவிகளை நல்கி வருகின்றது..எனவே இவ்வாறான நிறுவனத்தை தனியாருக்கு வழங்குவதை நாம் முற்றாக எதிர்கிறோம்.



இந்த நிலையில் இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு மில்கோ நிறுவனத்தை தனியாருக்கு வழங்குவதை நிறுத்த வேண்டும். இல்லாதுவிட்டால் எமது போராட்டம் தொடரும் என இதன்போது பாற் பண்ணையாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மண்டூர் பகுதியில் அமைந்துள்ள பால் சேகரிப்பு நிலையத்தைச் சேர்ந்த பண்ணையாளர்களும், மில்கோ நிறுவனத்தைத் தனியாருக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தனர்.





# கல்முனை சாரணர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவாகினர்

(எம்.எப்.றிபாஸ்)

அக்கரைப்பற்று, கல்முனை சாரணர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) அக்கரைப்பற்று நீர்பூங்காவில் அமைந்துள்ள ரீ.எப்.சீ. மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் உப தலைவர் குணாளன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புதிய நிர்வாக குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர். மாவட்ட சாரண சங்கத்தின் தலைவராக கலாநிதி எஸ்.எல். றியாஸ், செயலாளராக ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர் எம்.எச்.ஏ.வஹாப், பொருளாளராக ஓய்வு பெற்ற அதிபர் வீ.ஜெயந்தன், தவிசாளராக ஓய்வுநிலை பிரதிக் கல்வி பணிப்பாளர் வீ.குணாளன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை சங்கத்தின் போசகர்களாக ஓய்வு பெற்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஏ.வாஹீட், பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, மருதூர் ஹசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலோசர்களாக முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் யூ. எல்.எம். ஹாசிம், கோட்டக் கல்வி பணிப்பாளர் எஸ் ரவீந்திரன், ஓய்வு பெற்ற அதிபர் ஐ. எல்.ஏ. மஜீத் போன்றோர் சபையோரால் முன்மொழியப்பட்டனர்.



# விளையாட்டு வீரர்களுக்குக் கௌரவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டி மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மெய்வல்லுனர் வீரர்கள் மற்றும் 16 வயதுக்கு உட்பட்ட பட்மின்டன் அணியினர் ஆகியோரைப் பாராட்டி, பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் அப்துல் றஸாக் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.







# சிக்கிமின் முதல் சபாநாயகரின் உடல் கால்வாயில் இருந்து மீட்பு

கேங்டாக்,ஜூலை 17

சிக்கிம் சட்டசபையில் முதல் சபாநாயகராக பதவி வகித்த பெருமைக்குரிய பவுடியாலின் உடல் தீஸ்தா கால்வாயில் இருந்து மீட்கப்பட்டு உள்ளது.

இமயமலையையொட்டிய வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான சிக்கிமில் முன்னாள் மந்திரியாக இருந்தவர் ஆர்.சி. பவுடியால் (வயது 90). பாகியோங் மாவட்டத்தின் சோட்டா சிங்தம் நகரை சேர்ந்த இவர், கடந்த சில நாள்களுக்கு முன் காணாமல் போனார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் அவரை தேடி வந்தனர். இதற்காக தனியாக சிறப்பு புலனாய்வு குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இந்த நிலையில், புல்பாரி பகுதியில் உள்ள தீஸ்தா கால்வாயில் மிதந்து வந்த அவருடைய உடலை பொலிஸார் கண்டெடுத்தனர். அதனைக் கைப்பற்றி தீவிர விசாரணை நடத்தினர்.

அவர் அணிந்திருந்த கைக்கடிகாரம் மற்றும் உடைகளை கொண்டு அவரைப் பொலிஸார் அடையாளம் கண்டனர்.

சட்டசபையில் முதல் சபாநாயகராக பதவி வகித்த பெருமைக்குரியவர். அதன்பின் மாநில வனத்துறை மந்திரியானார். சிக்கிம் அரசியலில் முக்கிய பிரமுகரான அவர், ரைசிங் சன் என்ற கட்சியை தொடங்கி நடத்தினார்.

சிக்கிமின் கலாசார மற்றும் சமூக செயல்முறைகளை பற்றி ஆழ்ந்த புரிந்துணர்வு கொண்டவர். அவருடைய மறைவுக்கு சிக்கிம் முதல்-மந்திரி பி.எஸ். தமங் இரங்கல் தெரிவித்து உள்ளார். அவருடைய மறைவை அடுத்து, விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்று பொலிஸெ தெரிவித்தனர்.

# சமயபுரம் கோவிலுக்கு பாதயாத்திரை சென்ற ஐந்து பக்தர்கள் சரக்கு வாகனம் மோதி பலி!






திருச்சி,ஜூலை17

சமயபுரம் கோவிலுக்கு பாத யாத்திரையாக சென்ற பக்தர்கள் சரக்கு வாகனம் மோதி பலியான சம்பவம் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த பக்தர்கள் சிலர் திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாத யாத்திரையாக நடந்து சென்றுக் கொண்டிருந்தனர். அப்போது தஞ்சாவூர் மாவட்டம் வளம்பக்குடி அருகே திருச்சி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்த போது அவ்வழியாக சரக்கு ஏற்றிக் கொண்டு வந்த லொறி கட்டுப்பாட்டை இழந்து பக்தர்கள் மீது மோதியது.

இந்த விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலே பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்ததாக முத்துசாமி, மீனா, ராணி, மோகனாம்பாள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் படுகாயமடைந்த சங்கீதா, லட்சுமி ஆகிய இருவரும் தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி லட்சுமி என்பவர் உயிரிழந்தமையை அடுத்து பலி எண்ணிக்கை 5 ஆக உயர்ந்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் உயிரிழந்தவர்களின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.





# 9 இராணுவ வீரர்கள் உள்பட 70 பேர் கொங்கோவில் மோதல்களில் சாவு!

கின்ஷாசா,ஜூலை17

கொங்கோவில் போராட்டக்காரர்கள் தாக்குதலில் 9 ராணுவ வீரர்கள் உள்பட 70 பேர் கொல்லப்பட்டனர்.

கொங்கோத் தலைநகர் கின்ஷாசாவில் உள்ள கின்செல் கிராமத்தில் கடந்த சில ஆண்டுகளாக இரண்டு சமூகங்களுக்கு இடையே மோதல் நடந்து வருகிறது. நில உரிமைகள் மற்றும் அப்பகுதியின் வரலாற்று குடிமக்கள் மற்றும் கொங்கோ ஆற்றின் அருகே குடியேறிய யக்கா உள்ளிட்ட பல்வேறு இனங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இடையே நில உரிமைகள் தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் கொங்கோவின் ஜனாதிபதி பெலிக்ஸ் சிசெகெடி முன்னிலையில் போர் நிறுத்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், இரு சமூகங்களுக்கிடையில் மோதல்கள் தொடர்ந்து தீவிரமடைந்துள்ளன.

கொங்கோ இராணுவம் வன்முறையை அடக்குவதில் தோல்வியடைந்தது.

இதையடுத்து கொங்கோ கிழக்கில் போராளிகள் ஆயுதங்களுடன் போரிட்டு வரும் நிலையில், நாட்டின் மேற்கு பகுதியிலும் வன்முறை தீவிரமடைந்துள்ளது. இந்த தாக்குதலில் 9 ராணுவ வீரர்கள் உள்பட 70 பேர் கொல்லப்பட்டனர். இந்த பகுதியில் வன்முறையை கட்டுப்படுத்த இராணுவம் போராடி வருகிறது.

# ஆறு உல்லாசப் பயணிகள் தாய்லாந்தில் மர்ம மரணம்

பாங்காக்,ஜூலை17

தாய்லாந்து நாட்டின் ஓட்டல் அறையில் பலியாகி கிடந்த ஆறு வெளிநாட்டு சுற்றுலாவாசிகள் அனைவருக்கும் 37 முதல் 56 வயதுக்குள் இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாய்லாந்து நாட்டின் பாங்கொக் நகரில் உள்ள பிரபல கிராண்ட் ஹையாத் எராவன் ஹோட்டலில் வெளிநாட்டு சுற்றுலாவாசிகள் சிலர் வந்து தங்கியுள்ளனர். அவர்கள் வேறு வேறு அறைகளை வாடகைக்கு எடுத்து இருக்கின்றனர். இந்நிலையில், அவர்களில் 6 பேர் நேற்று மர்ம மரணம் அடைந்துள்ளனர்.



இதில், அவர்களின் உடல்கள் ஹோட்டலின் ஒரே அறையில் கிடந்துள்ளன. இது பொலிஸாருக்கு பலத்த சந்தேகம் ஏற்படுத்தி உள்ளது. அவர்களில் 2 பேரிடம் அமெரிக்க பாஸ்போர்ட் இருந்துள்ளது. அவர்களில் 3 பேர் பெண்கள். மற்ற 3 பேர் ஆண்கள் ஆவர். அவர்கள் மரணம் அடைவதற்கு முன்தெிர்த்தொ போராடியதற்கான எந்தவித அடையாளமும் இல்லை.

அவர்களின் உடலில் காயங்கள் எதுவும் இல்லை. அவர்களுக்கு வழங்கிய உணவு அப்படியே இருந்தது. அவர்கள் அனைவருக்கும் 37 முதல் 56 வயதுக்குள் இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த மர்ம மரண சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை ஹோட்டலின் பணிப்பெண் முதலில் பார்த்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி பொலிஸ் அதிகாரி திடிசேங்சவாங் இன்று கூறும்போது -

அவர்கள் தற்கொலை செய்து கொள்ளவில்லை. யாரோ அவர்கள் படுகொலை செய்துள்ளனர். அந்த நபர் யார் எனத் தேடி வருகிறோம் என கூறியுள்ளார்.

இதனை தொடர்ந்து, சம்பவம் நடந்தஹிட்டலுக்கு அந்நாட்டு பிரதமர் ஸ்ரத்தா தவிசின் நேரில் சென்று பார்வையிட்டார்.

அவருடன் மூத்த காவல் துறை அதிகாரிகளும் சென்றிருந்தனர். இந்த விவகாரத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க அவர் உத்தரவிட்டார். சுற்றுலாவுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், விரைவாக நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து விசாரணை அமைப்புகளுக்கும் உத்தரவிடப்பட்டு உள்ளது.

ஹொட்டல் அறையில் பலியாகி கிடந்தவர்களில் சிலர் வியட்நாம் நாடுகளை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் பிரதமர் தவிசின் இன்று கூறும்போது, இந்த விசாரணையில் எப்.பி.ஐ. அதிகாரிகளும் இணைந்துள்ளனர். ஏனெனில் அவர்களில் 2 பேர் அமெரிக்க குடிமகன்கள் என கூறியுள்ளார்.

பக்கங்கள் - 6

கனடா முரசு

புதன்கிழமை 17/07/2024

## வெப்ப நிலை உச்சத்தை எட்டும் என எச்சரிக்கை

ஒன்ராரியோ, ஜுலை 17
கனடாவின் அனைத்து மாகாணங்களிலும் கடுமையான வெப்ப நிலையில் நிலவும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

C2






# ரொறன்ரோவை உலுக்கிய மழை



ஒன்ராரியோ, ஜுலை 17
ஒன்ராரியோவில் நேற்று பெய்த பெருமழையினால் ரொறன்ரோ நகரம் உட்பட ரொறன்ரோவின் பெரும் பாகத்தின் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

டொரன்டோ பெரும்பாகத்தில் 125 மில்லிமீட்டர் வரை மழை பெய்யக் கூடும் என சுற்றுச்சூழல் கனடா எச்சரித்திருந்தது.

ஒரு மணி நேரத்திற்கு 40 மில்லி மீட்டர் வரை மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டிருந்தது.

செவ்வாய்க்கிழமை கிட்டத்தட்ட 100 மில்லிமீட்டர் மழை பெய்ததாக சுற்றுச்சூழல் கனடா தெரிவித்துள்ளது.

C2

# பஞ்சாப் பாடகரைப் பாராட்டிய ட்ரூடோவின் வாசகத்தால் சர்ச்சை

ஒன்ராரியோ, ஜுலை 17
பிரபல இந்திய பாடகர் குறித்து கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த ஒரு கருத்து இணையத்தில் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ, ரொரன்றோவிலுள்ள ரொஜர்ஸ் சென்டரில் நடைபெற்ற பிரபல இந்தியப் பாடகரான டில்ஜிட் டோஸ்ஜ்ஜின் இசை நிகழ்ச்சி ஒன்றிற்கு திடீரென விஜயம் செய்து, அவருக்குப் பாராட்டுகளை வழங்கினார்.

ஆனால், அதற்குப் பின் டில்ஜிட் குறித்து சமூக ஊடகமான எக்ஸில் அவர் வெளியிட்ட ஒரு செய்தி சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

கனடா ஒரு மாபெரும்

C2






# க்ளோவர்டேல் மோல் கொள்ளையர்கள் விபத்தில் சிக்கி வசமாக மாட்டினராம்!

கனடாவின் எட்டோபிர்கொக்கின் க்ளோவர்டேல் மோலில் நடைபெற்ற கொள்ளை சம்பவத்தில் சந்தேக நபர்கள் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவின் க்ளோவர்டேல் மோலில் (Cloverdale Mall) கடந்த திங்கள் கிழமை மாலை கொள்ளை சம்பவம் அரங்கேறியுள்ளது. மாலை 5 மணி அளவில் கொள்ளை சம்பவம் குறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், திருட்டுப் பொருள்களுடன் தப்பிச் சென்ற நபர்களுக்கு வலை வீசினர்.

நுபடலைவுழெ யுளநரெந மற்றும் நுயளவ ஆயடட அருகில் மோதி விபத்தில் சிக்கிய கார் ஒன்றில் சந்தேக நபர்கள் இருப்பதை பொலிஸ் கண்டுபிடித்தது.

ஆண் சந்தேக நபர் ஒருவர் காயங்களுடன் கைது செய்யப்பட்டார். மற்ற இரண்டு பேர் தப்பிச் சென்றனர்.

ஆனால் பின்னர் மற்றொரு நபரையும் காவல்துறை கைது செய்துள்ளது. மீதமுள்ள நபரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### வெப்ப நிலை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவின் சகல மாகாணங்களிலும், ஒரு பிராந்தியத்திலும் இவ்வாறு கூடுதல் வெப்பநிலை நிலவும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சில பிராந்தியங்களில் ஈரப்பதனின் அளவு வெப்பநிலை போன்ற காரணிகளினால் சுமார் 40 பாகை செல்சியஸ் வெப்பநிலையை உணர நேரிடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ, கியூபெக் மாகாணங்களில் வெப்பநிலை அதிகமாக காணப்படும் எனவும் பலத்த காற்று வீசும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்யும் சாத்தியங்களும் உண்டு என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கரையோர பகுதிகளிலும் கூடுதல் அளவிலான வெப்பநிலை நீடிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

### றொறன்ரோவை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீரற்ற காலநிலை காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக சில இடங்களில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மழை வெள்ளத்தினால் நகரின் சில அதிவேக நெடுஞ்சாலைகள் மூடப்பட்டிருந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

டீ.வீ.பீ நெடுஞ்சாலை, லேக் ஷொர் பொலிவாட் வீதியின் சில பகுதிகள் செவ்வாய்க்கிழமை மதியம் வெள்ளம் காரணமாக மூடப்பட்டிருந்தன.

சீரற்ற காலநிலை காரணமாக றொறன்ரோவின் 170,000 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளத்தினால் ஏற்பட்ட சேத விவரங்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இதேவேளை, கனடாவின் அநேக பகுதிகளில் கடுமையான வெப்பநிலை நிலவும் என எதிர்வுகூறப்பட்டிருந்த நிலையில் றொறன்ரோவில் இவ்வாறு வெள்ளம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பஞ்சாப் பாடகரை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடு, பஞ்சாபிலிருந்து வந்த ஒரு நபர் (a guy from Punjab), நம் நாட்டிற்கு வந்து வரலாறு படைக்கமுடியும், பல தரப்பட்ட மக்கள் நம் நாட்டில் வாழ்வது நம் பலம் மட்டுமல்ல, அது ஒரு சூப்பர் பவர் என்று குறிப்பிட்டிருந்தார் ட்ரூடோ.

ஆனால், ட்ரூடோ அவர் ஏன் பஞ்சாபிலிருந்து வந்த ஒரு நபர் என்று கூறினார்? அவர் இந்தியாவிலிருந்து வந்த ஒரு நபர் என்று கூறியிருக்கலாமே என்னும் தோரணையில் சமூக ஊடகங்களில் இந்திய அரசியல்வாதிகள் முதல் பலரும் கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.





# மாணவிகள் தங்கியிருந்த விடுதிக்குள் நிர்வாணமாகப் புகுந்த மர்ம ஆசாமி!

கனடாவில் மொண்ட்ரீயலில் பெரும்பாலும் பல்கலைக்கழக மாணவிகள் தங்கியிருக்கும் சைனா டவுனின் விடுதியொன்றுக்குள் நபர் ஒருவர் ஆயுதங்களுடன் நிர்வாணமாகப் புகுந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு சென்ற போது உள்ளே நபர் ஒருவர் கத்தியொன்றுடன் நிர்வாணமாக நிற்பதைப் பார்த்துத் தாம் அதிர்ச்சியுற்றார் என மாணவி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பின்பக்க கதவை உடைத்து உள் புகுந்திருந்த அந்த நபர் ஒரு கையில் கத்தியுடனும் மற்றக் கையில் தீயணைப்புக் கருவியுடனும் காணப்பட்டார்.

அந்த நபர் எவ்வாறான தாக்குதலை தம்மீது மேற்கொள்வார் எனத் தெரியாது தாம் அச்சமுற்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அந்நபர் இரண்டு வாரங்களுக்கு போதுமான உணவை வழங்குமாறு மாணவியிடம் கோரினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சக மாணவியொருவர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

விரைந்து செயற்பட்ட பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

49 வயதான வீடற்ற நபர் ஒருவரே இவ்வாறு குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார் எனவும் கூறப்பட்டது.

வீடற்றவர்கள் உளப் பிரச்சினைகளை எதிர்நோக்குவகின்றனர் எனவும் இதனால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளில் கனடியர்கள் மும்முரம்

கனடிய வாடிக்கையாளர்கள் செலவுக் குறைப்பு நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய மத்திய வங்கி இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.

கனடாவில் வட்டி வீத குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் பொருளாதாரம் குறித்து சாதக நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் குறிப்பாக வாடிக்கையாளர்கள் நிதி அழுத்தங்களை வெளிப்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் பொருளாதார அழுத்தங்கள் நெருக்கடிகள் ஏற்படக் கூடும் என்ற அடிப்படையில் மக்கள் தங்களது நிதி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடியா மத்திய வங்கியினால் வாடிக்கையாளர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

வியாபார முயற்சிகளில் ஈடுபடுவோரும் கூடுதல் தொகையை முதலீடு செய்ய விரும்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சந்தையின் நிலைமைகள் குறித்த நிச்சயமற்ற தன்மையை வாடிக்கையாளர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



# டொனால்ட் டிரம்ப் மீதான படுகொலை முயற்சிக்கு கனடிய மாகாண முதல்வர்கள் கவலை தெரிவிப்பு

**நோவா ஸ்கோச்சியா, ஜூலை 17**

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீதான படுகொலை முயற்சி குறித்து கனடிய மாகாண முதல்வர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மாகாண முதல்வர்கள் மூன்று நாள் கூட்டம் ஜூலை 15ஆம் திகதி ஆரம்பமாகியது.

நோவா ஸ்கோச்சியா மாகாணத்தின் தலைநகர் ஹாலி பெக்ஸில் இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் தங்கள் பாதுகாப்பை மாகாண முதல்வர்கள் மறுபரிசீலனை செய்துள்ளனர்.

மக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் இடையிலான உறவில் மிகவும் நிலையற்ற தருணத்தில் உள்ளோம் என மாகாண முதல்வர்கள் சந்திப்பில் கலந்து கொள்ளும் பிரின்ஸ் எட்வர்ட் ஐலண்ட் முதல்வர் டென்னிஸ் கிங் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புக் குழுவுடன் தமது பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் மறுபரிசீலனை செய்வதாக அல்பேர்ட்டா முதல்வர் டேனியல் ஸ்மித் குறிப்பிட்டுள்ளார்.

தன்னைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவில் நம்பிக்கை கொண்டிருப்பதாக ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் கூறியுள்ளார்.



# அமெ. மன்ஹறாட்டனில் கனடா வாங்கிய சொகுசுக் கட்டடம்!

**ஒன்ராரியோ, ஜூலை 17**

கனடா தனது நியூயார்க்கில் உள்ள தூதரகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக மன்ஹறாட்டனில் ஒரு சொகுசுக் கட்டடத்தை வாங்குவதற்கு கடந்த மாதம் 9 மில்லியன் டொலர்கள் செலவிட்டுள்ளது.

ஆனால், பழைய கட்டடத்தில் என்ன செய்யப்படுகிறது என்பதை மத்திய அரசாங்கம் கூற மறுப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கட்டிடம் சார்ள்ஸ் மன்னருக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டதாக தகவல் வெளியானதையடுத்து, கனடிய வெளிவிவகார அமைச்சு இந்த கொள்வனவின் பின்னணியில் இருப்பதாக ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சொத்துக்கான பத்திரம் 6.6 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் பட்டியலிடப்பட்டதாகவும், கடந்த மாதம் 'ஹிஸ் மெஜஸ்டி தி கிங் இன் ரைட் ஓவ் கனடாவிற்கு' விற்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



# கனடாவின் மத்திய அரசாங்கத்துடன் பணிபுரிவது நம் தலையை நாமே சுவரில் அடிப்பது போன்றது!

## பிரிட்டிஷ் கொலம்பியாவின் முதல்வர் விசனம்

**நோவா ஸ்கோச்சியா, ஜுலை 17**

வீட்டுவசதி முதல் பாடசாலை மதிய உணவுத் திட்டங்கள் வரையிலான முக்கியமான விடயங்களில் மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இல்லை என மாகாண முதல்வர்கள் தெரிவித்துள்ளனர்.

'ஒட்டாவாவுடன் (மத்திய அரசாங்கத்துடன்) பணிபுரிவது 'எங்கள் தலையை நாங்களே சுவரில் அடிப்பது போல் உணர முடியும்' என்று பிரிட்டிஷ் கொலம்பியாவின் முதல்வர் தெரிவித்துள்ளார்.

நோவா ஸ்கோச்சியா பிரதமர் டிம் ஹுஸ்டனால் நடத்தப்படும் ஃபெடரேஷன் கவுன்சிலின் கோடைக் கூட்டத்திற்காக, பத்து மாகாணங்கள் மற்றும் மூன்று பிரதேசங்களின் முதல்வர்கள் இந்த வாரம் மூன்று நாள்களுக்கு ஹாலிஃபாக்ஸில் உள்ளனர்.

மாநாட்டிற்கு முன்னதாக ட்ரூடோவுக்கு அனுப்பிய கடிதத்தில் 'கூட்டமைப்பின் ஒத்துழைப்பு உணர்வை' புதுப்பிக்க 'உண்மையான கூட்டாண்மையில் எங்களுடன் பணியாற்ற வேண்டும்' என்று நோவா ஸ்கோச்சியா முதல்வர் டிம் ஹுஸ்டன் பிரதமரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

செவ்வாயன்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், மாகாணங்களும் பிரதேசங்களும் தங்களுடைய குடியிருப்பாளர்களின் தேவைகளுக்கு நெருக்கமாக உள்ளன, மேலும் அவர்கள் முக்கிய பிரச்சினைகளை சமாளிக்க ஒட்டாவாவுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்ற விரும்புகிறார்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

# கனடாவில் பணவீக்க வீதத்தில் ஏற்பட்டு வரும் சாதக மாற்றங்கள்

**ஒன்ராரியோ, ஜுலை 17**

ஜுன் மாதத்தில் கனடாவின் பணவீக்க விகிதம் 2.7 சதவீதமாக குறைந்தது.

ஜுன் மாத பணவீக்க தரவுகளை கனடியப் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டது.

ஓராண்டு காலத்திற்கான ஒப்பீட்டின் அடிப்படையில் பணவீக்கத்தில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விலையில் ஆண்டுக்கு ஆண்டு ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியால் இந்த குறைவு பதிவாகியுள்ளது.

மே மாதத்தில், பணவீக்கம் 2.9 சதவீதமாக பதிவாகியிருந்தது.

எரிபொருள்களின் விலைகள், நீடித்து நிலைக்கக்கூடிய பொருள்களுக்கான விலைகள் போன்றவற்றின் மாற்றத்தினால் பணவீக்க வீதம் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஜுன் மாதத்தில் மளிகை பொருள்களுக்கான விலைகள் 2.1 வீதத்தினால் அதிகரித்துள்ளன.



ஓராண்டு கால ஒப்பீட்டின் அடிப்படையில் இந்த அதிகரிப்பு குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் மே மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது ஜுன் மாதத்தில் மளிகை பொருள்களின் விலை 1.5 வீதம் அதிகரித்துள்ளது.

கடந்த மே மாதம் ஆண்டு பணவீக்க வீதம் 2.9 வீதமாக காணப்பட்டதுடன் கடந்த ஜுன் மாதம் இது 2.7 வீதமாக குறைவடைந்துள்ளது.

கனடிய மத்திய வங்கி தனது அடுத்த வட்டி விகித முடிவை அடுத்த வாரம் புதன்கிழமை (24) அறிவிக்க முன்னர் வெளியாகும் இறுதி பணவீக்க தரவுகள் இவையாகும்.

இந்த மாத ஆரம்பத்தில், மத்திய வங்கி அதன் வட்டி விகிதக் குறைப்பை ஆரம்பித்தது.

மத்திய வங்கி வட்டி விகிதத்தை கால் புள்ளியாக குறைத்து 4.75 சதவீதமாக்கியது.

இந்த நிலையில் அடுத்த வாரம் மத்திய வங்கி மற்றொரு வட்டி விகிதக் குறைப்பை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை கல்வி நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல்

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் விதிப்பு

**பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 17**

பிரிட்டிஷ் கொலம்பியாவின் அரசாங்கம் பொது முதுநிலைக் கல்வி நிறுவனங்களுக்கு புதிய வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த புதிய வழிகாட்டுதல்கள் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை அவர்களின் மொத்த சேர்க்கையில் 30 சதவீதமாகக் கட்டுப்படுத்துகிறது.

'சர்வதேச மாணவர் சேர்க்கையானது, 'பொருத்தமான சேவைகளை வழங்குவதற்கான ஒரு நிறுவனத்தின் திறனைக் குறைக்காது' என்பதை உறுதிப்படுத்தவே புதிய வரம்பு என்று மாகாண அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய வழிகாட்டுதல்கள் பொதுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் சர்வதேச கல்வி மூலோபாயத் திட்டங்களை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று அமைச்சு குறிப்பிடுகின்றது.

பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம், சைமன் ஃப்ரேசர் பல்கலைக்கழகம் மற்றும் விக்டோரியா பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்கள் சர்வதேச மாணவர் சேர்க்கை அளவுகள் 30-சதவீத வரம்பைத் தாண்டவில்லை என்றும், இந்த மாற்றம் செயல்பாடுகளை பாதிக்காது என்றும் கூறுகின்றன.

